# தொண்டன்

ஆரம்பம் : பெப்ரவரி - 1969



## உங்களுக்கு சமாதானம்!

ஏப்ரல் - 2000 12/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதிய இயக்குனரை வரவேற்கின்றோம்

திருகோணமலை ~ மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்புத் துறையில் ஆறாவது இயக்குனராகப் பொறுப்பேற்றுள்ள அருள் தந்தை J.A.G. இரட்ணகுமார் அவர்களை மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக் குழுவும்,தொண்டன் ஆசிரியர் குழுவும் வாழ்த்தி வரவேற்கின்றது.

ஏற்கனவே திருக்கோவில் பங்குத்தந்தையாக பணிபுரிந்து கொண்டிருந்த அவர் தற்போது தன்னாமுனை புனித வளனார் ஆலய பங்குத்தந்தையாகவும், மறைமாவட்ட சமூகத் தொடர்புத் துறையின் இயக்குனராகவும் பொறுப்பேற்றுள்ளார். இளமையும், ஆர்வமும் மிக்க அருள் தந்தை அவர்கள் இம் மறை மாவட்ட சமூகத் தொடர்புத் துறைக்கு புதிய இரத்தம் பாய்ச்சி சாதனைகள் படைக்க இறை ஆசீர் வேண்டுகின்றோம்.

சமூகத் தொடர்பு ஆணைக்குழு
*திரு. மட் /மறைமாவட்டம்.*

# கத்தோலிக்க கையேடு - 2000

*மாபெரும் யூபிலி ஆண்டை முன்னிட்டு கத்தோலிக்க கையேடு – 2000 – என்னும் பயனுள்ள நூல் ஒன்று வெளிவந்துள்ளது. அருள் தந்தை J.S. அரசரெத்தினம் அவர்களால் வெளியிடப்பட்டுள்ள இவ் வேட்டில் திருகோணமலை – மட்டக்களப்பு மறை மாவட்டம் தொடர்பான பயனுள்ள பலதரப்பட்ட தகவல்களும் தரப்பட்டுள்ளன. கிறிஸ்த்தவப் பணியாளர்கள் முதல் ஒவ்வொரு கிறிஸ்தவர்களுக்கும் கைத்துணையாக இருக்கவேண்டிய இவ்வேட்டை மறைக்கல்வி நிலையம், ஆயரில்லம், மட்டக்களப்பு என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம் – விலை ரூபா 50/ =*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஏப்ரல் - 2000

மலர் 32 — இதழ் 03

ஆசிரியர்:
J. A. G. இரட்ணகுமார்

இணை ஆசிரியர்:
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்:
மெற்றில்டா இராஜேந்திரம்


வெளியீடு:
சமூகத் தொடர்பு நிலையம்,
திரு/மட். மறை மாவட்டம்.

முகவரி:
சமூகத் தொடர்பு நிலையம்,
அ. பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44,
BATTICALOA. 30000
Tel: 065-22723

விலை: 12/-

ஆண்டுச் சந்தா: 160/-
(தபாற்செலவு உட்பட)



உள்ளே.........

| | | |
|---|---|---|
| 1. | அன்புடன் உங்களோடு | ... 02 |
| 2. | சாவுக்கு ஒரு சவால் | ... 03 |
| 3. | குடும்பமும் சமூகப் | ... 05 |
| 4. | கண்ணீரின் அர்த்தம் | ... 07 |
| 5. | திருச்சபைச் செய்திகள் | ... 10 |
| 6. | பூலோகம்தான் | ... 12 |
| 7. | விளைவு என்ன? | ... 13 |
| 8. | கிறிஸ்தவ தலைமைத்துவம் | ... 14 |
| 9. | சிறுகதைப்போட்டி | ... 16 |
| 10. | இயேசுவின் | ... 17 |
| 11. | விடைபெறும் இயக்குனர் | ... 19 |
| 12. | திருகோணமலை மட். | ... 20 |
| 13. | கலை இலக்கிய மஞ்சரி | ... 21 |
| 14. | மீண்டும் போர் | ... 22 |
| 15. | போட்டி முடிவுகள் | ... 23 |
| 16. | விவிலிய பொது அறிவு | ... 24 |

ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு.........

அழிவுகள் மத்தியில் ஓர் ஆன்மா ஆறுதல் தேடுகிறது
ஓர் ஆன்மா மட்டுமல்ல, ஆயிரமாயிரம் ஆன்மாக்கள்
ஆறுதல் தேடுகின்றன...

யூபிலி ஆண்டின் ஆரம்பத்தில் ஏதோ சில நம்பிக்கைகள்
இருந்தன, அழிவுகள் மறையும் ஆறுதல் தோன்றுமென்று
ஆனால் ஆனையிறவு நிகழ்வுகள் சமாதானச்
சமிக்கைகளை அணைப்பதுபோல ஆக்குகின்றன

இது ஒரு தீர்வுப்பிரச்சினை என்பதைவிட இது ஒரு
மானப்பிரச்சனை ஆகிவிட்டது

இதன் விளைவு... நூற்றுக்கணக்கான உயிர்ப்பலிகள்!
சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க பல நாடுகள்
முன்வருவதாகக் கேள்வி

ஆனால் நாட்டுக்குள்ளே சமாதானம் வேண்டாம்,
சண்டைபிடி என்ற கோஷங்கள் கேட்கத்
தொடங்குகின்றன

இவ்வேளையில் யூபிலி நாயகனின் உயிர்ப்பை உற்று
நோக்கும்போது எத்தனை, எத்தனை வித்தியாசங்கள்!
யேசுவுக்கு மானம் ஒரு பிரச்சனையாக இருந்திருந்தால்
பலர் மீட்பில்லாமல் அழிந்திருப்பார்கள்.

பிலிப்பியர் 2:6-11 கூறும் கூற்று என்ன?
தம்மையே வெறுமையாக்கினார் சிலுவைச் சாவை
ஏற்றார் எல்லாம்வல்ல கடவுள். கடவுள் தன்மையைப்
பற்றிப்பிடித்துக் கொண்டிருக்கவில்லை. மக்களை
வாழ்விக்க அவர் வாழ்விழந்தார்.

பிரச்சினையில் சம்பந்தப்பட்டோருக்கு யேசு ஒரு
வழிகாட்டி

மானப்பிரச்சினையை தலையில் தூக்கி
வைத்திருப்பவர்களுக்கெல்லாம் சிலுவையில் தொங்கிய
இயேசுவே வழிகாட்டி

அவர் வழி நடந்தால் உயிர்ப்பைப் போன்று
வெற்றிகளும் சமாதானங்களும் பிறக்காமலா
போய்விடும்!

★ ★ ★ ★

ஆறாண்டுகள் சமூகத் தொடர்பு நிலையப் பணிக்கு
தன்னை அர்ப்பணித்து பணியாற்றிய அருட்பணி
A. தேவதாசன் அடிகளுக்கு நன்றிகூறி, செல்லுமிட
மெல்லாம் செய்பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

★ ஆசிரியர்

---



**கடவுள் இந்த இயேசுவை உயிர்த்தெழச்செய்தார்
இதற்கு நாங்கள் அனைவரும் சாட்சிகள்.**

திருத்தூதர் 2/32.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவுக்கு ஒரு சவால்

★ பெனி

மரணம்
மனித வாழ்க்கையின்
முற்றுப்புள்ளி அல்ல என்பதை
மானுடத்திற்கு உணர்த்திய
மனுமகனே
ராஜ வணக்கம்.

இந்தச்
சித்திரைத் திங்களில்
கண்ணை மூடி - அந்தக்
காட்சியை காண்கிறேன்.

முப்பது ஆண்டுகள்
அன்னை மரியாள்
அளித்த பயிற்சியும்
மூன்று ஆண்டுகள்
பணித்தள பயிற்சியுந்தான்
கல்வாரி வரை - உன்னோடு
கைகோர்த்து வந்ததா?

என்ன விந்தையது?
ஆண்டவன் நீ
மானுடத்தின் துன்பத்தை
மரச்சிலுவையாய்ச் சுமந்தாய்.

உன் பாடுகளால்
மரம்
மகிமை பெற்றது
எந்தவித
எதிர்பார்ப்புமின்றி
இரவல் தருவது
மரம் தானே!

கொடுத்து வைத்த முட்கள்!
உன் தலையில்
கிரீடமாகியதே!

நீ.....
தாகமாயிருக்கிறேன் - எனத்
தவித்தாய்
அவர்கள் தந்தார்கள்
கசப்பான காடியை.

அவர்களுக்கெங்கே புரிந்தது
உன்னிடம்
விரவிக்கிடந்தது
மனித குலத்தின்
விடியலுக்கான
விடுதலைத் தாகமென்று.

உன்
ஆவி பிரிந்த
அந்தக் கணப்பொழுதிலும்
அன்புக்கு அல்லவா
ஆகாரம் காட்டினாய்.
''இன்று
என்னோடு என்
தந்தையின் இல்லத்தில்
பந்தியய் . மர்வாம்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கடைசிக் காட்சி
அரங்கேறும் வேளையிலும்
கடமையுணர்வுதானே - உன்னிடம்
கனிந்து நின்றது.

''எல்லாம் நிறைவேறிற்று''
''தந்தையே உம் கரங்களில்...''
என தலை சாய்த்து
கண் வளர்த்தாய்.

சவத்திற்குக் காவல் வைக்கலாம்
அவர்களோ உன்
கல்லறைக்குக் கூட
காவல் வைத்தார்களே!

ஆனால்
மூடிக்கிடந்த கல்லறை
மூன்றாம் நாள் உடைபட - நீ
சாவிற்கே சவாலானாய்.

உன்
உயிர்ப்பிற்குப் பின்தானே
உலக வரலாறு
கி. மு., கி. பி. என
வகுக்கப்பட்டது.

இன்று நாம் வகுக்கப்படுகிறோம்.
வரலாற்றால் அல்ல.
ஜாதியால், மொழியால்,
மதத்தால் இனத்தால்
அடித்துக் கொள்ளுகிறோம்.

கல்வாரி நாயகனே......
அன்று நீ
சிந்திய ரத்தத்துளி
எமது விடுதலைக்கு
விடிவெள்ளியாகட்டும்.

உன் உயிர்ப்பு - என்
உறக்கத்தை கலைக்கட்டும்
இந்த
உயிர்ப்பு விழா எம்
உள்ளத்தை உயிர்ப்பிக்கட்டும்!

## என்ன பயன்?

உழைக்க விருப்பமில்லை
- அடுத்தவனுக்கு
உதவ விருப்பமில்லை
படிக்க விருப்பமில்லை
- படித்ததை
வாழவிருப்பமில்லை
எளிமை விருப்பமில்லை
- பேச்சில்
இனிமை இருப்பதில்லை
அறிவை வளர்ப்பதில்லை
- அடுத்தவன்
உயர்வைப் பொறுப்பதில்லை
கடமை புரிவதில்லை
- நெஞ்சில்
கருணை சிறிதுமில்லை
சொந்தச் சரக்குமில்லை
- சுய
சிந்தனை தானுமில்லை
என்ன மனிதனிவன்
- மண்ணில்
இருப்பதில் பயனுமில்லை,

★ பாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பமும் சமூகப் பணியும்

★ அருட்சகோ. தோமஸ் ஜோசப் ஜஸ்டஸ்



அனைத்தையும் படைத்த இறைவன் திருமண வாழ்வை மனித சமூகத்தின் தொடக்கமாகவும் அடித்தளமாகவும் அமைத்துள்ளார். ஆகவே குடும்பந்தான் ''சமூகத்தின் உயிரூட்டமான முதல் உயிரணு'' குடும்பம் சமூகத்தோடு உயிரூட்டமான, ஒழுங்கமைப்பான உறவுகளைக் கொண்டுள்ளது.

குடும்பம் சமூகத்தின் அடிப்படையாக இருப்பதாலும் உயிருக்கு பணிபுரிவதாலும் சமூகத்தை இடையறாது பேணுவதாலும் அது சமூகத்தோடு உயிரூட்டமான ஒழுங்கமைப்பான உறவுகளைக் கொண்டுள்ளது. ஏனெனில் குடிமக்கள் பிறப்பதும் குடும்பத்திலேதான். சமூகத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் உயிராக உள்ள சமூக நற்பண்புகளைப் பயில்கின்ற முதல் கல்விக் கூடமும் குடும்பமேதான். இவ்வாறு குடும்பம் தன்னிலேயே அடைபட்டுக் கிடக்கும் ஒன்றன்று. மாறாக குடும்பத்தின் இயல்பையும், அழைப்பையும் கருதும்போது அது பிற குடும்பங்களையும் சமூகத்தையுமே அரவணைக்கிறது என்பதும் சமூகத்தில் தனது பொறுப்பை ஏற்கிறது என்பதும் வெள்ளிடைமலை.

சமூகத்திற்கு குடும்பம் ஆற்றும் முதன்மையான, அடிப்படையான பணி குடும்பத்தின் அன்றாட வாழ்வில் நிகழவேண்டிய உறவு ஒன்றிப்பு, பகிர்ந்து கொள்ளுதல் ஆகியவற்றை அனுபவித்து உணர்தலில் அடங்கியிருக்கிறது. குடும்பம் என்னும் உறவுச் சமூகத்தில் அதன் உறுப்பினர் தம்முள் ஒருவரோடொருவர் கொள்ளுகின்ற உறவுகள் ''கைம்மாறு கருதாது வழங்குதல்'' என்ற தத்துவத்தால் தூண்டப்பட்டு நெறிப்படுத்தப்படுவனவாகும். குடும்பத்தில் எல்லா உறுப்பினரிடத்தும் ஆளுமை சார்ந்த மாண்பு தான் மதிப்பீட்டு நலன்களின் ஒரே அடிப்படையாகும். எனவே அம்மாண்பை மதித்து, பேணும்போது மேற்கூறிய ''கைம்மாறு கருதாத கொடை'' பின்வரும் பண்புகளைக் கொண்டதாக மிளிரும். இப்பண்புகள் தாராள மனத்தோடு விருந்தோம்பல், ஒருவர் ஒருவரைச் சந்தித்து உரையாடல், தன்னலமற்ற சேவை மனப்பான்பை, பெருந்தன்மையான பணி, ஆழ்ந்த ஒன்றிப்பு உணர்வு ஆகியவையாகும்.

இவ்வாறு குடும்ப உறுப்பினர் உண்மையான, முதிர்ச்சியான உறவு ஒன்றிப்பில் அடையும் வளர்ச்சியானது சமூக வாழ்வில் அடிப்படையான, வேறு எதுவாலும் சரிசெய்யப்பட முடியாத கல்வியாக உள்ளது, மட்டுமன்று, நீதி, உரையாடல், அன்பு போன்றவைகளால் உயிரூட்டம் பெறுகின்ற பரந்து விரிந்த சமூக உறவுகளுக்கு மேற்கூறிய வளர்ச்சியே முன்மாதிரியாகவும், தூண்டுதலாகவும் உள்ளது.

**மிகப்பெரிய அட்லஸ்**

உலகிலேயே மிகப்பெரிய அட்லஸ் புத்தகம் ஜேர்மனியின் செர்லின் நகர் வாசிகசாலையில் உள்ளது. 300 வருடங்களுக்கு முன்பு தயாரிக்கப்பட்ட இந்த அட்லஸ் புத்தகத்தில் 35 நாடுகளின் வரைபடங்கள் மட்டுமே உள்ளன. இதன் எடை 175 கிலோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விற்றமின் 'சி'**

*பத்துத் தோடம்பழங்களில் இருந்து கிடைக்கும் விட்டமின் 'சி' உயிர்ச்சத்து ஒரு ரோஜாப் பூவின் இதழிலிருந்து கிடைக்கிறது.*

கிறிஸ்தவக் குடும்பம் ஒரு குட்டித் திருச்சபையாகும். கிறிஸ்தவக் குடும்பங்களின் தலையாய பணிகளுள் அதன் திருச்சபை சார் பணியும் உள்ளடங்கும். அதாவது திருச்சபையின் வாழ்விலும், பணிப் பொறுப்பிலும் பங்கேற்பதன் வழியாகக் குடும்பம் இறையரசை வரலாற்றுப் போக்கில் கட்டியெழுப்பும் பணியாளாக நியமிக்கப்பட்டுள்ளது.

திருச்சபையும், கிறிஸ்தவக் குடும்பமும் பல்வேறான ஆழ்ந்த பிணைப்புக்களால் இணைந்துள்ளன. இப் பிணைப்புக்களால் தான் குடும்பம் ஒரு குட்டித் திருச்சபையாக, இல்லத் திருச்சபையாக மாறுகிறது. குடும்பம் தனக்கே உரித்தான விதத்தில் திருச்சபையின் மறைபொருளை வாழ்வில் பிரதிபலிக்கின்ற உயிருள்ள உருவாகத் திகழ்ந்திடக் காரணம் ஆக இருப்பனவும் மேற்கூறிய பிணைப்புக்களேயாகும்.

ஒவ்வொரு குடும்பமும் அதன் ஞானச் செல்வங்களை ஏனைய குடும்பங்களுடன் தாராளமாகப் பகிர்ந்துகொள்ள வேண்டும். இவ்வாறு கிறிஸ்துவுக்கும், திருச்சபைக்கும் உள்ள அன்பு ஒப்பந்தத்தின் சாயலாக விளங்கமுடியும். மேலும் ஒரு கிறிஸ்தவக் குடும்பம், விசுவசிக்கும், நற்செய்தியை அறிவிக்கும், இறைவனோடு உரையாடும், மனிதருக்குப் பணிபுரியும் சமூகமாக விளங்க வேண்டும்.

ஒரு கிறிஸ்தவக் குடும்பம் இறைவாக்கை ஏற்று, அறிக்கை இடுவதன் மூலம் தனது இறைவாக்குப் பணியை நிறைவேற்றுகிறது. இவ்வாறு நாள்தோறும் அதிகமாக விசுவசிக்கின்ற, நற்செய்தி அறிவிக்கின்ற சமூகமாக அது மாறுகிறது. கிறிஸ்தவக் குடும்பத்தின் விசுவாசமும், நற்செய்தி அறிவிப்புப் பணியும் மறை அறிவிப்பு உந்துதலைத் தம்முள் கொண்டுள்ளதோடு, அக்கடமை திருமுழுக்கிலும், உறுதிப் பூசுதலிலும் வேரூன்றியுள்ளது. கிறிஸ்தவக் குடும்பங்கள் தம் பிள்ளைகளிடையே மறையறிவிப்புப் பணியை பேணி வளர்ப்பதன் வழியாக திருச்சபையின் மறையறிவிப்புப் பணிக்கு மிகச் சிறப்பான விதத்தில் துணைசெய்கின்றன. பொதுவாகக் கூறுமிடத்து மனிதர் அனைவர் மேலும் இறைவன் கொண்டுள்ள அன்பை சிறுவயதிலிருந்தே குடும்பத்தில் தம் பிள்ளைகள் அறிந்துணரும்படி செய்வதன் வழியாக மேற்கூறிய மறையறிவிப்புப் பணிக்கு கிறிஸ்தவ குடும்பங்கள் துணைநிற்கின்றன.

குடும்பத்தின் முக்கியமான பணிகளின் ஒன்றான அன்பைச் செயல்படுத்துவதைக் குறிப்பிடலாம். மனித ஆட்களை உருவாக்கி பிறரோடு கொள்ளும் எல்லா உறவுகளிலும் அன்பைச் செயல்படுத்த வேண்டும். இவ்வாறு செய்யும்போது குடும்பம் தன்னிலேயே அடைபட்ட ஒன்றாக இராமல், சமூகத்திற்குத் திறந்ததாக இருக்கும். அதாவது நீதியுணர்வாலும், பிறர்மட்டில் கொள்ளும் அக்கறையாலும் உந்தப்பட்டு, அதுபோலவே சமூகம் அனைத்தின் மட்டிலும் தனக்குள்ள பொறுப்பை உணர்ந்ததாகக் குடும்பம் செயல்படலாம்.

*பிறருக்கு நல்லது செய்ய வேண்டுமென்று எவன் விரும்புகிறானோ அவனுக்கு அந்தக் கணமே நல்லது கிட்டும்.*

- கன்பூஷியஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரின் அர்த்தம் வேறு

## சிறுகதை

மாதா கோவிலின் மணி யோசை 'டாண் டாண்' என அந்தக் கிராமம் முழுவதும் ஒலிக்கின்றது. அந்த வைகறைப் பொழுதின் விளிம்பினிலே குருவிகளும் பறவைகளும் மகிழ்ச்சி கீதம் இசைக்கின்றன. எங்கோ தொலைவில் ஒரு சேவல் கூவும் சத்தம். இப்படி அமைதியான அந்தக் கிராமத்தை நகரத்துடன் இணைக்கும பிரதான பாதை அதன் இரு மருங்கிலும் பச்சை சேலை போர்த்தியது போன்று வயல் வெளிகள். அந்த வயல் வெளிகளை ஆரத்தழுவும் ஆதவனின் பொற்கதிர்கள். இந்த வேளையில் நகரத்தில் இருந்து கிராமத்தை வந்தடையும் இரவு நேர பஸ்வண்டி அந்த பாதையில் வந்து நிற்கின்றது. அதிலே இருந்து ஒருவர் இறங்கிவருகின்றார். சற்றுத் தூரம் வயல்வெளிகள் ஊடே வந்த அவர் சிறிது தடுமாறுகிறார். இது தனது கிராமம் தானா என யோசனை செய்கிறார். எவ்வளவு மாறுதல், எவ்வளவு முன்னேற்றம் என எண்ணிய அவர் மாதாகோயிலை நோக்கி விரைகின்றார் யார் அவர்!

அவர் வேறுயாருமல்ல. இந்தக் கிராமத்தின் மாதா கோவிலின்முன் அமந்திருந்து அன்றாடம் வருவோர் போவோரிடம் கையேந்தி சீவியம் நடாத்திய பேதுருதான். ஆம் சுமார் பன்னிரண்டு வருடங்களின்பின் இந்த ஊருக்கு வருகின்றார். இத்தனை நாட்களாக, இத்தனை வருடங்களாக இந்தக் கிராமத்தை விட்டு பிரிந்திருந்தது அவருக்கு என்னவோபோல் இருந்தது; மிகவும் வேதனையாகவும் இருந்தது. அவரின் வேதனை வாயால் சொல்ல முடியாத அளவு இருந்தது. இத்தனை காலமும் அவர் பிரிந்திருந்தது தான் விரும்பியல்ல. அவர் விரும்பாமலேயே அதுவும் இருந்தது வேறு ஊரில் அல்ல நாட்டில் அல்ல நகரத்துச் சிறைச்சாலையில்.

செய்யாத ஒரு குற்றத்தை அவர்மீது சுமத்தி 12 வருடங்கள் சிறைவாசம் பெற்று இந்த இடத்தை விட்டே துரத்தியது எல்லாமே அவர் மனக்கண்முன் வந்து நிழலாடுகின்றது.

ஆம் சுமார் 12 வருடங்களுக்கு முன்னர் இந்த கிராமத்தின் மாதா கோயிலின் திருவிழா மிகச்சிறப்பாகக் கோலாகலமாக கொண்டாடப்பட்டுக் கொண்டிருந்தது. கொடியேற்றம் தொடங்கி 10 நாட்கள் திருவிழாவும் திருவிழாவின்பின் தொடர்ந்து



ஐந்து நாட்கள் மலிவு விற்பனை கேளிக்கைகளுமாக சுமார் 15 நாட்கள் திருவிழா கொண்டாட்டம் நடைபெறும். அந்த வேளையில் ஆலய வளவில் பங்கு சபையினால் கடை ஒன்றும் திறக்கப்படும் அந்தக்கடைக்கு பங்குச் சபையினரே பொறுப்பாக இருப்பார்கள். பங்குச் சபையினா என்று சொல்லும்போது அதில் முக்கியமாக செயலாளர் அந்தோனிப்பிள்ளை மிகவும் நல்லவர். இரக்கம், அன்பு பெருந்தன்மை என்பவற்றை தன்னகத்தே கொண்டவர். இரண்டு பிள்ளைகளுக்கு தந்தை. அழகான குடும்பம் என்று பெயரெடுத்தவர். மற்றவர் பொருளாளர் அருளப்பு இவரும் மிகவும் நல்லவர். தன்னலம் கருதாது சேவையாற்றுபவர். நேர்மையானவர் இவர்கள் இருவரின் முழுப் பொறுப்பில்தான் கடை வியாபாரம் நடைபெறும்.

ஆலயத் திருவிழாவின் கடைசி நாளன்று அந்த சம்பவம் நடைபெற்றது. இரவு 10 மணியளவில் அனைத்து நிகழ்ச்சிகளும் முடிவுற்றபின்னா அனைவரும் வீடு சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டனர். இரவு 11 அல்லது 12 மணியிருக்கும் கடைப் பக்கம் இருந்து ஏதோ சத்தம் கேட்கவே மாதா கோயிலின் திண்ணையிலே படுத்துறங்கும் பேதுருவானவர் கூர்ந்து பார்க்கின்றார். ஒரு உருவம் பதுங்கி பதுங்கி கடைப்பக்கம் இருந்து தெருநோக்கி செல்கின்றது. அதன் கைகளில் சிறியதொரு பை. மாதா கோயில் திண்ணையைத் தாண்டிச் செல்லும்போது ஒரு சிறிய கடதாசி போன்ற பொருள் கீழே விழுகின்றது அதை அந்த உருவம் கவனிக்கவில்லை, ஆனால் அந்த உருவத்தை கவனித்த பேதுருவுக்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை மாதாவே என்ன இது கொடுமை என்று மனதுக்குள் அழுகின்றார். அந்த உருவம் தவறவிட்ட பொருளை மெதுவாக எடுத்துக்கொள்கிறார். அவருக்கு அன்று நித்திரையே இல்லை யோசித்தபடியேஇருக்கிறார்.

பொழுதும் விடிகின்றது இந்த விடயத்தை யாரிடம் சொல்வது. பங்கு சபையினர் வர நேரமாகும் பங்குத் தந்தையும் வர நேரமாகும். அதேவேளையில் அயலில் உள்ள ஊரின் செல்வந்தரான டோமினிக் மாஸ்டர் இவரை வரச்சொல்லி நேற்றே ஆள் அனுப்பியிருந்தார். கட்டாயம் அங்கு போகவேண்டும் போகாவிட்டால் தனது உடலை மூட ஒரு பழைய சேட்கூட கிடைக்காது. அதனால் யோசித்த அவர் டோமினிக் மாஸ்டரிடம் போய்வந்த பின்னர் விசயத்தை சொல்லிவிடலாம் என எண்ணியவாறு தனது மூட்டை முடிச்சுகளை ஓர் ஓரமாக வைத்துவிட்டு இரவு கண்டெடுத்த பொருளையும் அதனுள் வைத்துவிட்டு டோமினிக் மாஸ்டரிடம் போய்விட்டார். போன இடத்தில் கவனிப்பு கொஞ்சம் விசேசமாக இருந்ததால் மத்தியானம் வரையும் அங்கிருந்தார்.

ஊருக்குள் வந்தவரை வழியில் கண்டவர்கள் ஒரு மாதிரியாகப் பார்த்தனர். மக்கள் தன்னை ஒருவிதமாகப்பார்ப்பதை அவர்பொருட்படுத்தவில்லை. ஆலயத்தை நெருங்கியதும் ஆலயத்தின் கடையடியில் குருவானவர், செயலாளர், பொருளாளர், மற்றும் இதர உறுப்பினர்கள், பங்கு மக்கள் அனைவரும் குழுமியிருந்தனர். குருவானவர் பேதுருவைக் கண்டதும் ''நீங்கள் இப்படிச் செய்வீர்கள் என நான் சிறிதளவும் எண்ணவில்லை'' என்றார். செயலாளர் அந்தோனிப் பிள்ளை ''உங்கள்மீது நாங்கள் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தோம் அதை வீணாக்கிவிட்டீர்களே'' எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டார் பேதுரு. ''செய்வதை செய்துவிட்டு எதுவும் தெரியாதவர் மாதிரி நடிக்கிறீங்களே'' கத்தினார் அருளப்பு அனைவரும் வாய்க்கு வந்தபடி ஏசினர். அதன்பின் குருவானவர் கேட்டார் சரி, சரி நடந்ததை மறந்து விடுவோம். பணத்தை எங்கு வைத்திருக்கிறீர்'' என்றார். அப்போதுதான் பேதுருவுக்கு விசயம் விளங்கியது. ஆலயக் கடையில் களவுபோனது. திருடன் செல்லும்போது கீழே விழுந்த 500/- பணத்தைத் தான் எடுத்து வைத்தது திருடனைக் கண்டு தான் திகைத்ததும். காலையில் தான் வெளியூர் போனபின்னர் இங்கு கடை களவு போனவிடயம் பரவி தன்னைத் தேடியதும் தான் இல்லாததைக் கண்டு தன்மீது சந்தேகம் கொண்டு தனது முடிச்சுக்களை தேடும்போது 500/-ரூபா பணத்தை கண்டெடுத்தவுடன் தான் தான் திருடன் என்ற முடிவுக்கு அனைவரும் வந்து

## வீட்டுமருத்துவம் - தலைவலி

இஞ்சிச்சாறு 25 மில்லியுடன் 250 மில்லி பால் கலந்து அடுப்பில்வைத்து நன்றாகக் காய்ச்சவேண்டும். இதில் தேவையான அளவு சீனி சேர்த்து சாப்பிட்டு வந்தால் தலைவலி குறையும். தலைவலிக்கான அறிகுறி இருக்கும்போதே இதைச் சாப்பிடுவதால் முன்கூட்டியே தலைவலி வராமல் தடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> எந்த மலரும் பூக்கும்போது "நான் பிணத்துக்கு மாலையாவேன் என்று சபதமிடுவதில்லை. நான் அர்ச்சனை மாலையாவேன்" என்றும் கனவு காண்பதில்லை. அதைப் பறிக்கும் மனிதர்கள்தான் தீர்மானிக்கின்றனர்.

விட்டதையும் உணர்ந்தார். ஆனால் அவருக்கு வேதனை. திருடியவன் கூடநின்று தன் மீது குற்றம் சாட்டுகிறான். பேதுருவுக்கு மட்டும்தான் தெரியும் திருடியவன் யார் என்று. அவர் தகுந்த ஆதாரத்துடன் அதனை நிரூபித்து இருக்கவும் முடியும். ஆனால் சமூகத்தில் அந்த மனிதருக்கு இருந்த கௌரவத்தையும் செல்வாக்கையும் நினைத்து அவர் மௌனமாகஇருந்தார். நான் ஒரு நாடோடி அவனோ குடும்பக்காரன் அவனைக் காப்பாற்ற தான், சிறை செல்வது மேல் என எண்ணினார். திருட்டுப்போனது கொஞ்சப்பணம் அல்ல 12 நாட்களின் வியாபாரப் பணம் மொத்தம் 75 ஆயிரம் ரூபாய். இறுதியாக பேதுரு பொலிசில் ஒப்படைக்கப்பட்டார். அவர்மீது திருடியது, திருடிய பொருளை மறைத்தது, நம்பிக்கைத் துரோகம் புரிந்தது எனக் குற்றம் சாட்டப்பட்டது. வழக்கு தொடரப்பட்டு 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

பேதுரு சிறையில் காட்டிய நன்நடத்தையின் காரணமாக 12 வருடங்களில் விடுதலை செய்யப்படுகின்றார் இன்றுதான் ஊருக்கு வருகின்றார். பழைய நினைவுகளில் இருந்து மீண்ட பேதுரு ஆலயத்தை நெருங்குகிறார். ஆலய வாசலில் யாரையும் காணவில்லை. உள்ளே குருவானவர் அமர்ந்திருக்கின்றார். அவர் புதிய குருவானவர். பேதுருவைக்கண்டதும் புன்னகை புரிகின்றார். அவர் அருகில் அதே செயலாளர் அந்தோனிப்பிள்ளை, பொருளாளர் அருளப்பு இருவரும் நிற்கின்றனர். பங்குமக்களும் நிற்கின்றனர். ஆலயத்தில் எவ்வளவோ மாறுதல் ஏற்பட்டுள்ளது. மக்களும் பழைய விடயத்தை மறந்துவிட்டனர் அவர்கள் பேதுருவை அன்புடன் வரவேற்கின்றனர். தான் இத்தனை வருடம் சிறைத்தண்டனை அனுபவித்தாலும் மக்கள் தன்மீது கொண்ட அன்பினால் அந்த துன்பங்கள் அனைத்தும் ஒரு நொடியில் பேதுருவைவிட்டு விலகுகின்றது. தான் ஒருவரைக் காட்டிக் கொடுக்காமல் தண்டனை அனுபவித்ததை எண்ணி பெருமையடைகின்றார். ஆனந்தக்கண்ணீர் வடிக்கின்றார் அவரது கண்களில் கண்ணீரைக் கண்டதும் மக்களும் கண்ணீர் வடிக்கின்றனர். செயலாளர் அந்தோனிப்பிள்ளைகூட வயது சென்றவராய் தனது மகளின் திருமணத்தை எவ்வித தடங்கலுமின்றி மாப்பிள்ளை கேட்ட சீதனப்பணம் முழுவதையும் கொடுத்த திருப்தியில் பேதுருவைக் கட்டிக் கொண்டு கண்ணீர் சொரிகின்றார். அந்த வேளையில் அவருக்கு ஒரு சம்பவம் நினைவுக்கு வருகின்றது. 12 வருடங்களுக்கு முன்னர் இரவு 12 மணியளவில் பேதுருவின் முன் தான் கூனிக்குறுகி நின்றதையும் கையெடுத்து பேதுருவைக் கும்பிட்டு தன்னைக் காட்டிக்கொடுத்து விடவேண்டாம் என்று கெஞ்சியதும். இப்போது அனைவர் கண்களிலும் கண்ணீர் ஆனால் அந்தோனிப்பிள்ளையின் கண்களில் வடியும் கண்ணீருக்கு அர்த்தம் வேறு.


(யாவுக்கற்பனை)

செங்கலடி ரூபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபைச் செய்திகள்



**★ அகதிகள் மத்தியில் திருச்சபை**

குடிபெயர்ந்த மக்களுக்கான உதவிகளைக் கொண்டு சர்வதேச நிறுவனங்கள் பணியாற்றும் அதே வேளை திருச்சபையும் உலகின் பல பகுதிகளில் அகதிகளிடையே இப்பணியை மேற்கொண்டு வருகின்றதென புள்ளி விபரங்களோடு உலக உணவுத்திட்ட நிறுவனத்தில் உரையாற்றினார் அதற்கான திருப்பீடத்தின் நிரந்தரப் பார்வையாளர் பேராயர் ஒகஸ்ரீனோ மக்கெட்டோ. 40 நாடுகளில் குடிபெயர்ந்த மக்களிடையே திருச்சபை பணியாற்றி வருகின்றதென்ற பேராயர் மக்கெட்டோ கொலம்பியாவில் மட்டும் 1997ம் ஆண்டு முதல் 70 திட்டங்கள் மூலம் 66500 தனி ஆட்களுக்கும் 650 குடும்பங்களுக்கும் உணவு உதவி, வீட்டு வசதி, பொருளாதார நிவாரணம் ஆகிய துறைகளில் திருச்சபை உதவிவந்துள்ளது என்றார். திருச்சபைக் கட்டிடங்கள், பள்ளிகள், கோவில்கள் போன்றவைகளை அகதிகளின் புகலிடங்களாகப் பயன்படுத்துவது திருச்சபையில் பாரம்பரியமாக இருந்து வருகிற தென்பதையும் சுட்டிக்காட்டிய பேராயர் இதற்கு உதாரணமாக இலங்கையின் மடுமாதா திருத்தலத்தில் அனைவருக்குமான துயர்துடைப்பு மையத்தைக் காண்பித்தார். மக்கள் சுயமாக தங்கள் சொந்தக் காலில் நிற்பதற்கு உதவுவதாய் ஐ. நா. அமைப்புக்களின் திட்டங்கள் இருப்பதோடு போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களையும் சென்றடையும் பலம் பொருந்தியதாக இருக்க வேண்டும் என்னும் விண்ணப்பத்தையும் W. S. P. அமைப்புக்கு எடுத்துரைத்தார் பேராயர்.

**★ புனித பூமியில் திருத்தந்தை**

திருத்தந்தை 6ம் சின்னப்பர் புனித பூமிக்கு திருப்பயணம் மேற்கொண்ட 36 ஆண்டுகளுக்குப் பின்னர் அண்மையில் திருத்தந்தை 2ம் அருள்சின்னப்பர் அப்பகுதிக்குச் சென்றதைக் குறித்து மகிழ்ச்சியை வெளியிட்டனர் யோர்டன் கத்தோலிக்கர்கள். கடந்த மார்ச் மாதம் 20ம் திகதி அன்று புனித பூமிக்கான திருப்பயணத்தைத் தொடங்கிய திருத்தந்தை முதலில் யோர்டன் தலைநகர் ஆமன் சென்றார். இந்நகருக்கு தென்மேற்கே உள்ள மெய்பூ மலைக்கும் சென்றார் அவர். மோசே, தான் இறக்கு முன்னர் இம்மலையிலிருந்துதான் வாக்குத்தத்தப் பூமியை நோக்கினார் என்று சொல்லப்படுகிறது. தற்சமயம் அப்பகுதியில் பிரான்சிஸ்கன் துறவுமடம் ஒன்று உள்ளது. மேலும் யோர்தான் நதியில் கிறிஸ்து திருமுழுக்குப் பெற்ற வாரி அல்ஹறார் என்னும் இடத்துக்கும் திருத்தந்தை சென்றார். யோர்டான் மக்கள் தொகையில் 1 வீதத்தினர். அதாவது ஏறக்குறைய 60,000 பேர் கத்தோலிக்கர். மேலும் இயேசு பிறந்த பெத்லகேம் நகருக்கும் திருத்தந்தை திருப்பயணம் சென்றதை கௌரவிக்கும் முகமாக அந்நகரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரு ஒன்றுக்கு திருத்தந்தை 2ம் அருள்சின்னப்பர் என்ற பெயர் சூட்டப்படும் என்று அந்நகர மேயர் அறிவித்தார். 36 ஆண்டுகளுக்கு முன்னர் திருத்தந்தை புனித பூமிக்குத் திருப்பயணம்மேற்கொண்டதன் நினைவாக பெத்லகேமில் ஒரு தெருவுக்கு திருத்தந்தையின் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

## ★ கத்தோலிக்கர் ஆதரவு

பாகிஸ்தானில் சிறுபான்மைச் சமூகங்களுக்கு என தனித்தனி தேர்தல் தொகுதிகள் உள்ள அமைப்பு முறையை ரத்து செய்வதற்கு அந்நாட்டு தேசிய தேர்தல் குழு அழைப்பு விடுத்துள்ளமைக்கு ஆதரவு தெரிவித்துள்ளன கத்தோலிக்க நிறுவனங்கள். சிறுபான்மை சமூகங்களுக்கென தனித்தனியான தேர்தல் தொகுதிகள் அமைப்பது ஜனநாயகத்துக்கு எதிரானது என்று சொல்லி இவ்வமைப்புமுறை இரத்துச்செய்யப்படுமாறு அரசுக்கு வேண்டுகோள் விடுத்தது தேசிய காங்கிரஸ் குழு. தேர்தல் குழுவின் இப்பரிந்துரை ஜனநாயக ஆட்சி முறையை கட்டி எழுப்புவதற்கு முக்கியமானதாயும் சரியான சமயத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாயும் உள்ளது என்று பாகிஸ்தான் ஆயர் பேரவையின் நீதி, மற்றும் அமைதிக்கான பணிக்குழு கூறியது. எனினும் இப்பரிந்துரை ஏற்கனவே 1997ம் ஆண்டிலும் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது என்பதையும் இப்பணிக்குழு குறிப்பிட்டது.

## ★ இவ்வாண்டில் மாமனிதராகத் திருத்தந்தை

ருமேனியாவின் தேசிய வானொலி நிலையமான 'புகாறெஸ்ட்' வானொலி திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரை இவ்வாண்டின் மாமனிதராகத் தேர்ந்தெடுத்துள்ளது. உலக அமைதிக்கு அவர் ஆற்றிய பங்களிப்பையும், தம் நாட்டிற்கு அவர் வருகை தந்ததையும் கருத்தில்கொண்டு 'புகாறெஸ்ட்' வானொலி' அவருக்கு அவ்விருதை வழங்கியுள்ளது.

திருத்தந்தையின் முகமும் புகாறெஸ்ட் வானொலி நிலையமும் இருபக்கத்திலும் பொறிக்கப்பட்ட மெருகூட்டிய வெள்ளிப் பதக்கத்தையும் சான்றிதழையும் பேராயர் ஜியான் கிளோட் பெரிசெட் திருத்தந்தையின் சார்பாகப் பெற்றுக்கொண்டார்.

ஜனநாயகத்துக்காகவும், மனித உரிமைகளுக்காகவும் ஓயாது பாடுபட்டு உலக மக்களிடையே சமாதானத்தையும் புரிந்துணர்வையும் வளர்த்தமைக்காகவும், ஓர்த்தொடக்ஸ் சபையினர் பெரும்பான்மையாக வசிக்கும் ருமேனியாவைத் தரிசிக்க முன்வந்ததாலும் கிறிஸ்தவ ஒன்றிப்புக்காக அவர் தொடர்ந்து எடுத்துவரும் முயற்சிகளுக்காகவும் இவ்விருது அவருக்கு வழங்கப்படுவதாக சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பூலோகந்தான் பரலோகம்

ஆ. கமல், இருதயபுரம்

இன்னும்
எத்தனை நாட்களுக்கு...
யூதர்களைவிட
கொடுமையாக
மீண்டும் மீண்டும்
மீட்பரை
சிலுவையேற்றுவோம்.

கூட்டிவைத்த
ஆலயத்தில்
கைக்குட்டை விரித்து
முட்டிக்கால்
இடுபவனே!
ஒரு
கணமேனும்
சிந்தித்துப்பார்.
எத்தனை முட்கள்தான்
மீட்பரின்
உடல் முழுதும்
இரத்தக் கீறலிட்டது.
அதில் கூட
உன்
கல்மனம்
கிழியவில்லையா?

மனிதனைத்தான்
நீ
மதிக்கவில்லை.
வானமிருண்டு
பூமியதிர்ந்து
திரைகள் கிழிந்து
இயற்கைகூட
இறை மகனுக்காய்
சாட்சி சொன்னதே.
இந்த இறப்பு
உனக்காய்த்தானென்று.
இதுகூட
உன் இதயத்தை
இடிக்கவில்லையா?

பாவத்தைப் புதைக்க
கட்டிய
கல்லறைக்குள்
அவரையே
அடக்கம்பண்ணிவிட்டு
தேவனுக்கு
அடங்காமல்
அலைபவர்களே!
உயிர்த்தபோதாவது
உணரவில்லையா நீங்கள்
அவர்
உன்னதர்தானென்று.
இனியேனும்
கொடுஞ்செயல்களில்
சிலிர்க்காத
சிந்தனைகளையெல்லாம்
சிலுவையேற்றிவிட்டு
திரும்பிப்பாருங்கள்.
பூலோகந்தான்
பரலோகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளைவு என்ன?

★ மெற்றில்டா அக்கா

பாடசாலை மணியோசை கேட்டது. இரண்டுமணி. பாடசாலை முடிந்துவிட்டதற்கான அடையாளம் அது. இறைவணக்கம் முடிந்தது. 9ந்தர மாணவர் சிலர் பாடசாலைக் காணியிலமைந்து இருந்த மாமரத்தைக் குறிவைத்து ஓடினர். ''பிள்ளைகளே'' ஓடிய மாணவரைக் கணித ஆசிரியரின் குரல் இழுத்து நிறுத்தியது. ஆசிரியர் தொடர்ந்தார். ''நாளை சனிக்கிழமை, எல்லோரும் என் வீட்டுக்கு வரவேண்டும்'' என்று கண்டிப்பாகக் கட்டளையிட்டுவிட்டுச் சென்றதும் சத்தமிட்டுக் கத்திக்கொண்டு மாமரத்தை நோக்கி ஓட்டம்பிடித்தனர்.

சனிக்கிழமை விடிந்ததும், ஆசிரியரின் வீடு சென்றனர். வகுப்பு முடிந்தபோது, ஆசிரியர் ''நாளையும் வரவேண்டும்'' எனச் சொன்னதற்கிணங்க மறுநாளும் சென்றனர். வகுப்பு முடிந்ததும் விடைபெற்றுச் சென்றுவிட்டனர். மாலை 6 மணியளவில் ஆசிரியரின் மூன்றாவது வீட்டுக்காரர் ''மாஸ்டர், மாஸ்டர்'' என்ற குரலோடு வந்து சேர்ந்தார். ''வாங்க ராசா அண்ணன். வாங்க இருங்க'' என ஆசிரியர் வரவேற்றார். ''நானிருக்க வரல்ல'' வந்தவரின் குரல் சூடாக இருந்ததாக ஆசிரியருக்கு ஒரு உணர்வு ''நான் வந்த விசயத்தைச் சொல்லிவிட்டுப் போறன். எங்கட வீட்டில 'விளாட்' மாபரம் முதற்பழம் காய்ச்சிருந்தது. சாமிக்குக் கொடுக்க எண்டு வச்சிருந்தம். அது ஒண்டே ஒண்டுதான் மரத்தில இருந்துது. நேற்று உங்களிட்ட படிக்க வந்தவங்க பறிச்சிட்டுப் போய்ட்டாங்க. வாழும் வளரும் பிள்ளைகள். இது அவங்களுக்கு ஆகாத பழக்கம். சொல்லத்தான் வந்தனான்'' சென்றுவிட்டார். ஆசிரியர் அதிர்ந்துபோய் நின்றார்.

சிறுவர்களே! நாம் செய்யும் சில காரியங்கள் எமக்கு அந்தந்த வேளைகளில் மகிழ்ச்சியாக இருப்பதால், அதன் விளைவுகளைப் பற்றிச் சிறிதும் சிந்திப்பதேயில்லை. யார் யாரெல்லாம் வாதிக்கப்படுகிறார்கள்; கவலைப்படுகிறார்கள்; வேதனைப்படுகிறார்கள்; துக்கப்படுகிறார்கள்; பாதிக்கப்படுகிறார்கள் என்றெல்லாம் எமக்குக் கிஞ்சித்தும் கவலையில்லை. நமது கெட்டித்தனம். செய்து முடித்துவிட்டோம் என்ற இறுமாப்பு மட்டுமே போதும் என்று நினைத்துக் கொள்கிறோம் இது பிழையாகும்.

நாம் தனியனாய்ச் சென்றால், எம்மிடம் இருக்கும் நல்ல குணங்கள் தீய நண்பருடன் கூடிச்செல்கையில் இருப்பது இல்லை. நாம் ஒரு செயலைச் செய்ய முன் வருகையில் அதன் விளைவுகளை எண்ணிப்பார்க்க மறக்கக்கூடாது. ''எண்ணித் துணிக கருமம்'' என்கிறார் தெய்வப்புலவர் வள்ளுவர். நான் செய்யும் செயலுக்குப்பின் நல்ல விளைவும் வரும். தீய விளைவும் வரும். நல்ல விளைவு விரும்பத்தக்கது. ஆனால் தீய விளைவை யாருமே விரும்பமாட்டார்கள். இங்குள்ள சம்பவத்தில், மாணவர்கள் தம் பாடசாலைக்குக் கெட்ட பெயர் ஏற்படும்; தமக்கு வகுப்பு வைக்கும் ஆசிரியருக்குச் சிரமம் ஏற்படும். வீட்டுக்காரருக்குக் கோபம் ஏற்படும். அனைத்திற்கும் மேலாகத் தம் பெற்றோர், தம் வீட்டுக்கு வீண் பெயர்களை எடுத்துத்தரும் என்பவை பற்றியெல்லாம் சிறிதும் சிந்தித்துப் பார்த்ததாகத் தெரியவில்லை.

அயல் வீட்டார் இருவரைப் பகைக்க வைப்பதால் என்ன பயன்? நான் ஒரு மாம்பழத்தை அடித்து அனைவரும் உண்டதில் என்ன பெரிய நிறைவு வந்திருக்கப்போகிறது? பஞ்சமாபாதகத்தில் ஒன்றல்லவா களவு? நாம் அதை விரும்பிச் செய்வதா?

எமது நல்வாழ்வு எதிர்காலத்தில் மலர நாம் சிறுவயதிலிருந்தே தீயவற்றை விலக்கி, நல்ல பண்புகளைவளர்த்துக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ தலைமைத்துவம்

★ ஸ்ரான்லி பிரபாகரன்

இயேசு சமூகத்தோடு இணைந்து, சமூக நடைமுறைகளினூடாக ஆன்மீக வாழ்வைக் கட்டியெழுப்பினார். இதற்காக பல கருத்துக் களைப் போதித்தும், வாழ்ந்தும் காட்டினார். அவற்றுள் ஒன்றுதான் பணியாளரின் கடமைகள்பற்றிய கருத்தாகும். ஆனால் பணியாளர் பற்றிய உலக நோக்கு வேறு. முகாமைத்துவம், சமூகசேவை, நிர்வாகம், அரசியல் போன்ற துறைகளில் பணியாற்றும் ஊக்குவிப்பாளர்களின் கடமைகளாக தலைமைத்துவம், பொறுமை, பொறுப்பேற்றல், நுட்பத்திறன் ஆகியவை முன்வைக்கப்பட்டுள்ளன. இயேசுவின் கருத்தும், அவரது அரசும் தனித்துவமானவை. இதற்குக் காரணம் உலகின் நோக்கு வேறு என்பது ஒன்று. மற்றது உலகிலுள்ள அனைவருமே இயேசுவை அறியவில்லை. பொதுவாக நாம் ஒருவரைப் பார்த்து ''நான் அவரை அறிவேன்'' என்று கூறுவதில் பல்வேறு நிலைகள் உள்ளன. அதேபோன்றுதான் இயேசுவை அறிவதிலும். முதலில் அவரைப் பெயரளவில் அறிதல்; அடுத்து அவரது போதனைகளை அறிதல்; அடுத்தது போதனைகளை வாழ்வதால் அதன் கனாகனத்தையும், ஆழத்தையும் அறிதல். இயேசு போதித்ததை வாழ்தல்' இரண்டு வகை. ஒன்று புத்திமதிப்பாங்கானது. மற்றது வாழ்வை ஆக்கிரமித்து ஆன்மாவைத்தொடுவது. உலக மகான்களும் புத்திமதி கூறியுள்ளனர். உதாரணமாக இந்திய மரபில் புத்தர், காந்தி, ஔவை, வள்ளுவர் முதலானோர் ''உயிர்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடாது, கசடறக்கற்று அதன்படி ஒழுக வேண்டும்'' என்றெல்லாம் உலகோர்க்கு ஒழுக்க சீலங்களுக்கு பாதை காட்டியுள்ளனர். சமூகத்தை சீர்திருத்த எண்ணும் அறிஞர்களும், ஞானிகளும் இதேவரிசையில் வைத்து இயேசுவின் போதனைகளை சமூகத்தைச் சீர்திருத்தும் கருவியாகப் பயன்படுத்தியுள்ளனர். இதுவும் வரவேற்கத்தக்கது. ஏனெனில்



இயேசுவின் போதனை மறைபொருளல்ல. அது காலம் வரும்போது அவரவர்க்கு வித்தாகி, முளைத்து, பயன்தரும்.

இயேசுவின் போதனைகளை புத்திமதிப் பாங்கில் வாழ்ந்துவிட்டால் அவரை அறிந்து விட்டோம் என்று கூறலாமா? அதுவும் இல்லை. அவை வாழ்வின் மையத்தில் பூரணமான இடத்தைப் பிடிக்கவேண்டும். அப்போது அதன் கடினத்தை நாம் உணர முடியும். இவ்விடத்தில் நாம் நின்று நிதானிக்க வேண்டியதொன்று உண்டு. இயேசுவின் போதனை தன்னளவில் கடினமானதா? அதுதான் இல்லை. உலகின் தன்மையும் அதன் மதிப்பீடும்தான் அதனைக் கடினமாக்கியுள்ளன. இயேசுவின் பாதை சிலுவையின் பாதை என்று வர்ணிக்கப்படுவதற்கான காரணமும் இதுதான். இது கடினமாக இருந்தாலும் சத்தியம் எதுவோ அதனை இயேசு நல்லெண்ணம் கொண்டு கூறியுள்ளார். இவ்விடத்தில் தான் கிறிஸ்தவ மனநிலையும், கிறிஸ்தவம் அல்லாத மனநிலையும் வேறுபடுகிறது. இன்னுமொரு வகையில் கூறினால் உலகம் முன் வைக்கும் தலைமைத்துவமும், கிறிஸ்து முன் வைத்த தலைமைத்துவமும் வெவ்வேறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> உலகத்தின் இயக்கமே ஒரேயொரு சொல்லில்தான் இருக்கிறது. அந்தச்சொல் 'வலிமை' என்பதுதான் வலிமை என்ற சொல்லின் கருத்துதான் 'இன்று உலகை ஆள்கிறது.
>
> - சுவாமி விவேகானந்தர்

கிறிஸ்தவத் தலைமைத்துவத்துக்கு அமைய வாழும் போதுதான் அதன் அர்த்தத்தையும், கனாகனத்தையும் உணரலாம். பொதுவாகத் தலைவன் ஒருவன் ஒழுங்கமைத்தல், கட்டளையிடல், வழிநடத்துதல், முன்மாதிரியாக இருத்தல் ஆகியவற்றால் தன் இலக்கை அடையலாம், என்பது உலக நோக்கு. ஆனால் இயேசு தலைவனாயிருப்பவனுக்குக் காட்டிய முன்மாதிரிகை வேறு. அதாவது தலைவனே பணியாளனாதல். இயேசு தம் சீடர்களின் கால்களைக் கழுவி, யூதப் பண்பாட்டில் உள்ள வாழ்க்கை நடைமுறையின் அடிப்படையில் ஒரு தலைப்பாணியின் தலைவனின் ஆளுமைக்கு எடுத்துக் காட்டுக் கூறினார். சமூகத்தின் சர்ச்சைக்குரிய, விமர்சனத்துக்குரிய பாத்திரங்களை நாமும் பொறுப்பேற்று என்பணி வாழ்வை முன்னெடுத்துச் செல்ல இயேசு அழைக்கின்றார். செயல்களில் மாத்திரமல்ல மனநிலையிலும் மாற்றங்கள் உண்டாக வேண்டும்.

இங்கே எந்த நிலைகளில் கிறிஸ்தவத் தலைமைத்துவத்தைப் பின்பற்ற வேண்டும் என்ற வினா எழலாமல்லவா? நாட்டுக்கு, சமூகத்துக்கு, நிறுவனத்துக்கு, குழுவுக்கு, குடும்பத்துக்குத் தலைமை வகிப்பவர்கள் மட்டும்தான் தலைவர்களல்ல. நற்செய்தி அறிவிக்கும் பணியை திருமுழுக்கின் மூலமாகப் பெற்றுக்கொண்ட நாம் ஒவ்வொருவரும் சவால்களுக்கு முகங்கொடுத்து நற்செய்தி அறிவிக்கும்போது, தன்னை இழந்து பணி புரியும் பணியாளனாக இருந்து இயேசு காட்டிய முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும்.

உலகோர் பேசும் தலைமைத்துவத்தில் கூட இன்று 2 வகையைக் காண்கின்றோம். பணம், பலம் என்பவற்றால் ஆக்கிரமித்தாடுதல் என்பது ஒன்று. மனித உரிமை, ஜனநாயகம், மனித நலன் என்பனபற்றிய எடுத்துரைப்புக்கள் இரண்டாவது. இரண்டாவதைப் பார்த்தால் மனிதன் இயேசுவின் போதனையினை அண்மித்துவிட்டான் என்பது புலப்படுகின்றது. இச்சூழ்நிலையில் கிறிஸ்தவப் பணியாளர்களும் கவனமாக இருந்து சமூகத்தில் நல்ல தலைவர்களுக்குரிய விழுமியங்களைக் கட்டி எழுப்பவேண்டும்.

## திருகோணமலை மாவட்டச் சிறப்பிதழ்

தொண்டன் - ஜுலை மாத இதழ் திருகோணமலை மாவட்டச் சிறப்பிதழாக வெளிவரவுள்ளது. இவ்விதழைச் சிறப்பிக்க திருமலை மாவட்டப் படைப்பாளிகளிடமிருந்து ஆக்கங்களை எதிர்பார்க்கிறோம்.

அவை - கவிதை, கட்டுரை, சிறுகதை, செய்திகள், விமர்சனம், தகவல்கள், என்று எந்த வடிவத்திலும் அமையலாம். திருமலை மாவட்டத்தின் சிறப்புத்தன்மைகளை, அதன் வரலாறு, சமூக, கலாசார பண்பாட்டு அம்சங்களை வெளிப்படுத்தும் ஆக்கங்கள் விரும்பப்படுகின்றன. மேலும் திருமலை மாவட்ட கிறிஸ்தவர்கள் தொடர்பான தகவல்கள், யூபிலி ஆண்டுக்கான நடவடிக்கைகள் போன்றவையும் எதிர்பார்க்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய இறுதிநாள்: 15 மே 2000.

முகவரி: ஆசிரியர் - தொண்டன்,
திருமலை மாவட்டச் சிறப்பிதழ்,
அ. பெ. எண் 49, மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதைப் போட்டி!

**திருகோணமலை மாவட்ட எழுத்தாளர்களுக்கு மட்டும்!**

★ தொண்டன் - திருமலை மாவட்ட சிறப்பிதழாக வெளிவருவதை ஒட்டி திருமலை மாவட்ட எழுத்தாளர்கள் மட்டும் பங்குகொள்ளும் சிறுகதைப் போட்டி இது.

★ ❋ தொடர்பு சாதனங்கள் பற்றிய விழிப்புணர்வு,
❋ சமாதானத்துக்கான மானுடத்தின் ஏக்கம்,
❋ யூபிலி ஆண்டு காட்டும் வாழ்க்கை நெறி.

போன்ற விடயங்கள் சிறுகதையின் கருப்பொருளாக அமையலாம்.

★ முழுத்தாளில் மூன்று பக்கங்களுக்குள் அமையவேண்டும். தாளில் ஒரு பக்கம் மட்டுமே எழுதப்படவேண்டும்.

★ நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

★ அனுப்பவேண்டிய இறுதி நாள் 15 மே 2000.

★ பரிசுகள் ஜுலை மாதம் திருகோணமலையில் நடைபெறவிருக்கும் மறைமாவட்ட சமூகத் தொடர்பு தின விழாவில் வழங்கப்படும்.

★ முகவரி: திருமலை மாவட்ட சிறுகதைப் போட்டி
தொண்டன்
அ. பெ. எண் 44, மட்டக்களப்பு.

---

# கவிதைப் போட்டி!

**திருகோணமலை மாவட்ட மாணவர்களுக்கு மட்டும்!**

**கவிதைக்கான கரு.**

'எங்களை நாங்கள் உருவாக்குவோம்'

★ வயது வித்தியாசமின்றி எல்லா மாணவர்களும் பங்கு கொள்ள லாம். பெயர், வகுப்பு, பாடசாலை என்பன தனியாக எழுதி இணைக்கப்பட வேண்டும்.

★ பங்குகொள்ளும் மாணவரை பாடசாலை அதிபர் உறுதிப்படுத்த வேண்டும்.

★ இருபது முதல் இருபத்தினான்கு வரிகளுக்குள் கவிதை அமைய வேண்டும்.

★ தெரிவு செய்யப்படும் மூன்று கவிதைகளுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

★ நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

★ அனுப்பவேண்டிய இறுதிநாள் 15 மே 2000.


முகவரி: திருமலை மாவட்ட மாணவர் கவிதைப்போட்டி
தொண்டன்,
அ. பெ. எண் 44, மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவின் உயிர்ப்புதரும் சமாதானம்

★ அருட்கலாநிதி டொமினிக் சாமிநாதன்
கிழக்குப் பல்கலைக்கழகம்



எல்லாக் கிறிஸ்தவர்களுடைய வாழ்விலும் மறக்கமுடியாத ஒரு நாள் இயேசு உயிர்த்த நாளாகும். இவர்கள் எல்லோரும் இயேசு ஆண்டவரின் உயிர்ப்பு நாளை நன்றியறிதலுடன் கொண்டாடுகிறார்கள். அதனால்தான் இந்த நாள், நாட்களில் எல்லாம் முதன்மையான நாளாய் விளங்குகின்றது.

ஏனெனில் கிறிஸ்து உயிர்த்து விட்டார். மரணத்தை வென்றுவிட்டார். பாவத்தையும் பாவத்தின் தலைவனுமாகிய சாத்தானையும் தோற்கடித்து வெற்றி வீரராய்த் திகழும் நாளே இந்நாளாகும்.

இன்று நாம் நமது நாட்டையும் நாம் வாழும் உலகையும் உற்றுநோக்கினால் ஆங்கே நாம் காண்பது என்ன? ஒருபுறம் போர் முனைகளையும் போர்க் கலன்களையும் காண்கிறோம். மறுபுறம் அமைதி வேண்டும், சமாதானம் வேண்டும் என்ற ஓயாத விண்ணப்பத்தினையும் காண்கிறோம். போர் புரிவோரும் சமாதானத்திற்காகவே போர் புரிவதாகக் கூறிக்கொள்கின்றனர். ஆனால் சமாதானம் என்பது மட்டும் எங்கும் நிலவுவதாகக் காணமுடியாமல் இருக்கின்றது. இதுவே இன்றைய நிலை.

இயேசு ஆண்டவர் உயிர்த்த பின் தமது சீடர்களுக்குத் தோன்றிய வேளை சமாதானத்தை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன். என் சமாதானத்தையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் அளிக்கும் சமாதானமோ, உலகம் தரும் சமாதானம் போல் அன்று, எனச் சொன்னார்.

இன்றைய உலகும் உலகை ஆள்வோரும் ஆயுத பலத்தினாலும் அடக்கு முறையினாலும் அமைதியை நிலைநாட்ட முயலுகின்றனர். ஆயினும் வெற்றியீட்டியதாகக் காணவில்லை.

இயேசு அளிக்கும் சமாதானம் இத்தகையது அன்று. மாறாக அது மனித உள்ளத்தின் அடித்தளத்திலே உருவாக்கப்படும் ஆழ்ந்த ஒருமைப்பாடு நிறைந்த அமைதியாகும். சமாதானத்திற்கு ஊறுவிளைவிக்கும் சுய நலத்தையும், தற்பெருமையையும் சிலுவையிலே அறைந்து விட்டதனால் உருவாகும் நிரந்தர அமைதி நிலையாகும். இயேசு அளிக்கும் சமாதானம் மனிதர்களை இறைவனின் சாயலாக ஏற்றுக்கொள்வதனால் ஏற்படும் அன்பு உறவில் வளரும் சமாதானம். பாவத்தையும் பாவப் பழக்க வழக்கங்களையும் கல்லறைக்குள்ளே அடக்கம் செய்துவிட்டு வந்ததனால் ஏற்படும் புதிய வாழ்வே இந்த சமாதானம். இது மனிதரிடத்தில் ஏற்படுகின்ற மன மாற்றத்தினால் உருவாகும் ஒரு புதிய நிலை, புதிய ஒரு மனப்பான்மையாகும். இத்தகையோர் எதிரிகளையும் அன்பு செய்யும் ஆற்றல் மிக்கவராவர். அவர்களுக்கு எதிரிகளே இருக்கமாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு உயிர்ப்புத் திருநாள் இப்புதிய மனப்பான்மையையும் அதிலிருந்து உருவாகும் புதிய உலகையுமே நமக்கு நினைவூட்டி நிற்கின்றது. அவரது உயிர்ப்பினால் உருவாகும் புது யுகம் இதுவே. இதனைப் பணம் கொடுத்து வேண்ட இயலாது. பொருள் கொடுத்தும் பெற்றுக்கொள்ள முடியாது. படைப்பலத்தினாலும் அடையமுடியாது. நமது மனத்தையும் மனப்பான்மையையும் மாற்றியமைப்பதன் மூலமாக மட்டுமே அடையமுடியும்.

இத்தகைய அமைதியையே நமக்கு இயேசு விட்டுச்செல்ல விரும்பினார். மனிதர்களிடத்திலே ஏற்படும் மனமாற்றத்தின் பிரதிபலிப்பினால் உருவாகும் ஒரு உறவு நிலையையும் அதன் விளைவையுமே இயேசு தம் சீடருக்கு விட்டுச்செல்ல விரும்பினார்.

இந்நிலையை அடைய விரும்புவோர் முதன்முதலில் தம்மையே மாற்றியமைக்க வேண்டும். அடுத்தவரின் முழுமையான நலத்தினையும் பாதுகாப்பையும் நான் எனது வாழ்வின் குறிக்கோளாகக் கொள்வதனால் ஏற்படும் புதிய நிலையையே இது சித்தரிக்கின்றது, ஆங்கே நீதிநெறியுண்டு, அன்பு உண்டு, ஒற்றுமையுண்டு. அபிப்பிராய வேற்றுமைகள் இருந்தாலும் அன்பு முறிபடா நிலை ஒன்று உண்டு. இதனால் மனிதர்களின் சமூக உறவுகளிலும், சமூக அமைப்புக்களிலும் தனிமனித வாழ்விலும் மனக்கசப்பு இல்லாத ஒரு புதுவகையான உறவு மிளிரும். அதனால் யாவருக்கும் நல்வாழ்வும் பாதுகாப்பும் உடல் நலமும் மன அமைதியும் நிலவும். இவ்வமைதி நீண்ட வாழ்வையும் நலமான துயிலையும் செல்வச் செழிப்பையும் நிம்மதியான மரணத்தையும் கொடுப்பதாய்த் திகழும்.

எசாயா இறைவாக்கினர் மெசியாவின் வருகையைக் குறிப்பிடும் பொழுது இவ்வண்ணமே பேசுகின்றார்;

சமாதானமான இருப்பிடத்திலும்
அச்சமறியாக் கூடாரங்களிலும்
அமைதி நிறைந்த இல்லங்களிலும்
நம் மக்கள் குடியிருப்பார்கள்.
(எசா. 32:18)

இவ்வாறு உயிர்த்த இயேசு அளிக்கும் அமைதி அரசியல் பாதுகாப்பையும் சமூக வாழ்வில் பொருளாதார வளத்தையும் அளிப்பதாய் மிளிரும். ஆங்கே மனித உரிமைகளுக்கு மதிப்பும் மரியாதையும் உண்டு. மனிதர்கள் யாவரும் மாண்பு மிக்கவர்களாய்ப் பேணப்படுவர். மனிதர்கள் இறைவனின் சாயல்கள் என ஏற்றுக்கொள்ளப்படுவர். மனிதர்கள் உரிமைகள் பல கொண்டவர்கள் என்பது அனைவராலும் ஏற்றுக்கெகள்ளப் பட்ட ஒன்றாகும். மனித உறவுகள் போற்றப்பட்டு, நீதி நெறி ஆறாய்ப் பெருக்கெடுத் தோடும்.

இதுவே உயிர்த்த இயேசு அளிக்கும் உண்மைச் சமாதானமாகும். இதனையே புனித பவுல் அப்போஸ்தலரும் எபேசியருக்கு எழுதிய திருமடலில் கூறியுள்ளார். கிறிஸ்துவே நம் சமாதானம். அவரே யூத இனத்தையும் பிற இனத்தையும் ஒன்றாய் இணைத்தவர். தடைச்சுவரென நின்ற பகைமையை தன் ஊனுடலில் தகர்த்தெறிந்தார். இவ்விரு இனத்தாரிலிருந்தும் தமக்குப் புதியதோர் இனத்தைப் படைத்து சமாதானம் செய்யும்படி யூதச்சட்டத்தையும் வெறுமையாக்கினார். சிலுவையினால் பகைமையை ஒழித்து அதன் வழியாக இவ்விரு இனத்தாரையும் ஒரே உடலில் கடவுளோடு ஒப்புரவாக்கும்படி இவ்வாறு செய்தார், (எபேசி. 2:13-16). எனவே சமாதானம் செய்வோம். சமாதானமாய் வாழ்வோம். வாழ வழி வகுப்போம்.

இவ்வரம் உங்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென ஆசிக்கின்றேன், மன்றாடுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடைபெறும் இயக்குனர்
# அருள்தந்தை A. தேவதாசன்

திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்ட சமூகத் தொடர்புத்துறை இயக்குனராகவும், தொண்டன் சஞ்சிகையின் ஆசிரியராகவும் கடந்த ஆறு ஆண்டுகளாக (1994-1999) பணியாற்றிய அருள்தந்தை A. தேவதாசன் அவர்கள் தமது பொறுப்பிலிருந்து விடுபட்டுள்ளார்.

திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்ட சமூகத் தொடர்புத் துறையின் ஐந்தாவது இயக்குனராகப் பொறுப்பேற்றுக் கொண்ட தேவதாசன் அடிகள் தமது பணிக் காலத்தில் சமூகத் தொடர்புத் துறையின் வளர்ச்சிக்கும் ஏற்றத்துக்கும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார வசதிகளுக்கு மத்தியிலும் சில புதிய முயற்சிகளை மேற்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

தொடர்புத்துறை சார்ந்த விழிப்புணர்வை ஊட்டவும் கிறிஸ்தவ தொடர்பாடல் முயற்சிகளை ஊக்குவிக்கவும் அனைத்துலக ரீதியில் கொண்டாடப்படும் உலகத் தொடர்பு தினத்தை நமது மறைமாவட்டத்தில் கொண்டாட நடவடிக்கை எடுத்தவர் அவர். அவ்விழாக்களில் நம்மத்தியிலே உள்ள கலைஞர்கள், எழுத்தாளர்கள், போன்றோருக்கு விருது வழங்கி கௌரவித்தார். மறைமாவட்ட அளவில் சமூகத் தொடர்புப் பணிகளை பரவலாக்க வேண்டும் என்ற நோக்கோடு மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழுவை மீளமைக்கவும், பிராந்தியக் குழுக்களை நிறுவவும் ஆர்வம் கொண்டிருந்தார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலையத்தால் வெளியிடப்படும் 'தொண்டன்' சஞ்சிகையின் ஆசிரியராக விளங்கிய அவர் அதன் வளர்ச்சியிலும், அதற்கான வசதி வாய்ப்புகளைப் பெருக்குவதிலும் தன்னால் இயன்ற வரையில் முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

அமைதியான சுபாவமும், கனிவான பேச்சும் நிறைந்த ஆன்மீக உணர்வும் கொண்ட அருள்தந்நை அவர்கள் கலை உணர்வு நிரம்பப்பெற்றவர். நாடகத் துறையில் ஆர்வமும் ஆற்றலும் பெற்றவர். மேடை நாடகங்களிலும் வானொலி நாடகங்களிலும் நிறைந்த பங்களிப்புகளைச் செய்தவர். எதையும் புதுமையாகச் செய்யவேண்டும் என்ற எண்ணமுள்ள அவர் தமது நாடகப் பிரதிகளில் புதிய உத்திகளைக் கையாள்வதுண்டு. அவை அத்துறை சார்ந்த பலராலும் சிலாகிக்கப்பட்டதுண்டு.

தற்போது மறைமாவட்ட சமூகத் தொடர்புத்துறை சார்ந்த பொறுப்புகளிலிருந்து விடுபட்டுள்ள அவருக்கு - தனது முன்னாள் ஆசிரியருக்கு தொண்டன் ஆசிரியர் குழுவும், மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழுவும் தமது நெஞ்சு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றன. அடிகளார் நீண்ட காலம் ஆரோக்கியத்தோடு வாழ்ந்து நமது மறைமாவட்டத்துக்கு அரும் பணிகள் ஆற்றிட வேண்டுமென வாழ்த்தி இறை அருள் இறைஞ்சுகிறோம்.

சமூகத் தொடர்பு ஆணைக்குழு,
திரு. மட். மறைமாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழுவின் இவ்வாண்டுக்கான 2வது கூட்டம்

மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழுவின் இவ்வாண்டுக்கான 2வது கூட்டம் மார்ச் மாதம் 25ம் திகதி காலை 10-00 மணி அளவில் மட்/அருள் ஒளி இல்லத்தில் நடைபெற்றது. கல்முனை மறைக் கோட்ட உறுப்பினர்கள் நீங்கலாக திருகோணமலை - மட்டக்களப்பு மறைக்கோட்டங்களின் உறுப்பினர்கள் வருகைதந்தனர்.

சமூகத் தொடர்புத்துறையின் புதிய இயக்குனர் அருள்தந்தை J. A. G. இரட்ணகுமார் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் முன்னாள் இயக்குனர் அருள்தந்தை A. தேவதாசன் அவர்களும் கலந்துகொண்டார். அன்னார் கடந்த காலங்களில் மறைமாவட்ட சமூகத் தொடர்புத் துறைக்கு ஆற்றிய பணிகள், அவை தொடர்பாக எடுத்த முயற்சிகள் அவரிடம் விளங்கிய முன்மாதிரிகையான சிறந்த குணங்கள் பற்றியெல்லாம் நிலையப் பணியாளர் மலர்வேந்தன், திரு. அ. ச. பாய்வா, இயக்குனர் அருள்தந்தை J. A. G. இரட்ணகுமார் ஆகியோர் எடுத்துரைத்தனர். அன்னாருக்கு ஆணைக்குழு சார்பில் நன்றி கூறியதோடு புதிய இயக்குனரை வாழ்த்தி வரவேற்றனர். ஏற்புரை வழங்கிய முன்னாள் இயக்குனர் பணியாற்றிய காலத்தில் அதனூடாகத் தாமும் வளர்ந்ததாகக் கூறினார். அத்துடன் துணைநின்ற பணியாளர்களுக்குத் தம் நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்.

தொடர்ந்து கடந்த கூட்டத்தின்போது எடுத்த தீர்மானங்கள் தொடர்பாக நடைமுறைக்கான திட்டங்கள் தீட்டப்பட்டு உரியவர்களுக்குப் பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. சிறப்பாக ஜூலை மாதம் 2ம் திகதி திருகோணமலையில் நடைபெறவுள்ள தொடர்பு தின விழாபற்றி விரிவாக ஆராயப்பட்டதோடு விழா நிகழ்வுகளும் ஒழுங்குபடுத்தப்பட்டன. இறுதியில் இயக்குனரின் நன்றி உரையுடனும் செபத்துடனும் கூட்டம் நிறைவுற்றதைத் தொடர்ந்து மதியவிருந்து இடம்பெற்றது.

திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழு உறுப்பினர்கள்

இயக்குனர்:

அருள்தந்தை J. A. G.இரட்ணகுமார்

மட்டக்களப்பு மறைக்கோட்டம்:

- மலர்வேந்தன்
- J. R. இருதயம்
- S. ஜெயராஜா
- மெற்றில்டா இராஜேந்திரம்
- ஜெயம் அருமைநாயகம்
- வள்ளுவன் சுவாமிநாதன்
- A. S. பாய்வா

கல்முனை மறைக்கோட்டம்;

- S. டேவிட்
- ஜோசப் ஜஸ்மின்
- P. D. A. ஜெயக்குமார்

திருகோணமலை மறைக்கோட்டம்:

- G. அல்பேட்
- காணிக்கை ஜோசப்
- சபாநாதன் சதீஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கலை-இலக்கிய மஞ்சரி

அ. ச. பாய்வா

எது கவிதையென்பது தொடர்பாக உலகக் கவியரங்கில் நிகழும் சர்ச்சைகள், சரியான கவிதைச் செல்நெறிக்கு இட்டுச் செல்லப்பட்டுக்கொண்டிருக்க, எது தமிழ்க் கவிதையென்பதைவிட, கவிதை வடிவத்தின்மீது நிறைய சர்ச்சைகள் நிகழ்ந்துகொண்டிருப்பது விசனத்துக்குரிய விடயந்தான்.

கவிதையென்றாலே உணர்வுகளின் இசை வடிவம்தான் என்பதில் ஐயமில்லை. இசையென்றால் ஒலி, லயம் ஆகிய இரண்டுக்குள் மாத்திரம் கட்டுப்படுவதல்ல. கூடவே படிமங்களிலும், வாசிப்பவன் மனதிலுண்டாகும் வன்மையான, மென்மையான உணர்வுகளிலுமுள்ளதென்பதே பொருந்தும். (இசையிலும் மெல்லிசை - வல்லிசை (ROCK) உள்ளன)

பண்பாட்டுத்தளமான இசையோடு ஒன்றித்த செவிவழி மரபா, தொழிற்புரட்சியினூடே தொடர்ந்து, ஆதிக்க வர்க்கத்தின் கலாச்சாரப் பரம்பலுக்கு வழிவகுத்த எழுத்தறிமரபா என்ற கேள்விகளின் மத்தியில், கவிதையை அதன் ரிஷிமூலமான இசையிடமே செல்லவிடுங்களென்ற கோஷங்கள் அதிகரிக்க, இப்போது இரண்டுக்கும் பொதுவான, பரந்த தொடர்புகொள்ளல் வட்டத்தைக்கொண்ட, செவிவழி, எழுத்துவழி இணைந்த மரபான ORATURE இப்போது ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. (ஆபிரிக்கக் கவிஞரான 'காபியியேல் ஒக்காரா' என்பவர் இதனையொரு கோட்பாடாகவே முன்வைத்தவர்)



## தமிழ்க் கவிதை

எது கவிதையென்கிற முரண்பாட்டின் மத்தியில், வைரமுத்துவின் 'வசனக்குழம்பு' நீங்கலாக, உணர்வுகளைப் பிழிந்தெடுக்கும் படிமங்களில் எழுதப்படும் புதியன யாவுமே கவிதைகளாகும் என்ற கூற்றும் செல்லுபடியானதாகும்.

படிமங்கள் தெரியாது புதுக்கவிதை எழுதுபவர்களும், படிமங்களைப் புரியாத வாசகர்களுமாய் புதுக்கவிதையுலகம் தடம்புரண்டு கொண்டிருக்க, இந்த நூற்றாண்டில் அருகிப் போகக்கூடிய சில நூறு மொழிகளில் தமிழுமொன்றென ஆய்வுகள் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்க, இன்றும் சாகித்திய பரிசுக்காகவும், மாகாணசபைப் பரிசுக்காகவும் எழுதுபவர்கள் உள்ளவரை இந்த ஆருடங்கள் மெய்யாகிவிடுமோவென்கிற ஐயம் தமிழ்கூறும் நல்லுலகில் (தொல்லுலகில்) எழுந்திருப்பது நியாயந்தானே.

> தனக்குரியதை விட்டுக் கொடுக்காமல் மற்றவர்களிடம் தியாகத்தை எதிர்பார்ப்பது முட்டாள் தனம்.
>
> - அடிகளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் போர்

மலர்

சமாதானப் பேச்சு வார்த்தை என்னும் சலசலப்புகளுக்கு மத்தியில் மீண்டும் வட பகுதியில் உக்கிரமான போர் வெடித்துள்ளது.

நோர்வே ஏற்பாட்டாளராக இருந்து சம்பந்தப்பட்டவர்களிடையே பேச்சு வார்த்தை ஒன்றை நடத்த முன்வந்ததும் 'இழுபறிப்பட்டாலும் ஏதோ கொஞ்சம் ஆசுவாசப்படலாம்' என்ற எண்ணம் மக்கள் மத்தியிலே ஏற்பட்டது உண்மை.

அரசும் கட்சிகளும் சுற்றிச் சுற்றிப் பல சுற்றுகள் பேசியும் உருப்படியாக ஒன்றுமே இல்லை என்ற செய்திகள் வந்தபோது 'இது எதிர்பார்த்ததுதான்' என்று மக்கள் பேசிக் கொண்டார்கள். அதைத் தொடர்ந்து அரசு, அமெரிக்கா, சீனா போன்ற நாடுகளில் ஆயுதக் கொள்வனவுகளில் இறங்கியுள்ளது என்ற செய்திகள் 'என்ன நடக்கப்போகிறது' என்பதைக் கட்டியம் கூறிவிட்டன. இடையிடையே தலைநகரில் குண்டுவெடிப்புகள், கொலைகள், கைதுகள் வேறு. தற்போது ஆனையிறவை அண்மித்த பகுதிகளிலே கடும் சண்டை மூண்டிருக்கிறது. இராணுவத்தினரும், புலிகளும், பொதுமக்களுமாக நூற்றுக் கணக்கில் மரணமடைந்துள்ளனர். ஆயிரக் கணக்கான மக்கள் வாழ்விடங்களைவிட்டு அகதிகளாக வெளியேற்ற உள்ளனர். ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வெளியேற அனுமதி மறுக்கப்பட்டு போர்ச் சூழலுக்குள் பரிதவித்து நிற்கின்றனர். ஒன்றுமட்டும் தெளிவாகத் தெரிகிறது. இருதரப்பாருமே பேச்சு வார்த்தையில் நம்பிக்கை கொள்ளவில்லை. தமிழ் மக்கள் எது தமது தேவை என்று கருதுகிறார்களோ அதைக் கொடுக்க அரசு தயாராக இல்லை. எதற்காகத் தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டுள்ளார்களோ அதை அரசு பேச்சு வார்த்தை மூலம் கொடுக்கும் என்ற நம்பிக்கை புலிகளுக்கும் இல்லை. இந்நிலை நீடிக்கும்வரை எத்தகைய ஒரு தீர்வும், சமாதானமும் இந்நாட்டை எட்டிப்பார்க்கப் போவதில்லை. போரின் கொடுமையை இந்நாடு நன்றாக அனுபவித்துவிட்டது. அனுபவித்து வருகிறது. உயிரழிவுகள், பொருளழிவுகள், அகதிமுகாம் வாழ்க்கை, இடப்பெயர்வு, புலப்பெயர்வு, விலையேற்றம், பசி, பட்டினி, ஆரோக்கியமின்மை, உடல்-உள நோய்கள், போரின் கொடுமை அத்தனையும் இந்நாட்டில் குடியேறிவிட்டன. சிங்கள பௌத்த பேரினவாதம் பேசும் போர் விரும்பிகள் இதுபற்றி கவலைப்படாது விடலாம். ஆனால் இந்த நாட்டையும் மக்களையும் நேசிக்கும் மனித நேயமுள்ள ஓர் இலங்கைக் குடிமகன், ஆழ்ந்த ஆன்மீக உணர்வுள்ள ஒரு மதவாதி நிச்சயம் கவலைப்படுவான். தொடர்ந்தும் இந்நிலையை நீடிக்க விடுவது இந்நாட்டுக்கு - மக்களுக்குச் செய்யும் மிகப்பெரும் அநீதியாகும். போரின் வெற்றி தோல்விகளை ஒரு புறம் வைத்துவிட்டு மக்கள் நிம்மதியாக மூச்சுவிட முதலில் வழி காணவேண்டும்.

பேச்சுவார்த்தைக்கு முன் அதில் நம்பிக்கைகொள்ளக் கூடிய சூழலை உருவாக்குவது அவசியமாகும். குண்டுகள் ஒருபுறத்தே வெடிக்க, துப்பாக்கிகள் மறுபுறத்தே சீற, கைதுகளும், சித்திரவதைகளும், காணாமல் போதல்களும் இடையறாது நடக்க, பேச்சு வார்த்தை மேசையில் கைகுலுக்குவது யாரை ஏமாற்ற?

பரஸ்பரம் ஒருவர்மீது மற்றொருவருக்கு நம்பிக்கை ஏற்பட்டாலன்றி பேச்சுவார்த்தை சாத்தியமாகாது. இதில் அதிகளவு பொறுப்பு அரசுக்கே உண்டு. ஏனெனில் பாதிக்கப்பட்டவர்கள், பல்வேறு வகைகளிலும் அடக்கி ஒடுக்கப்படுபவர்கள், காலங்காலமாக ஏமாற்றப்பட்டவர்கள் தமிழ் மக்களே.

(23ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலிய - பொது அறிவுப் போட்டி - 45 முடிவுகள்

**விடைகள்:**

1. சேபா நாட்டு அரசி (2 குறிப்பேடு 9/6)
2. திருமுழுக்கு யோவானைக் குறித்துக் கூறப்பட்டது. (லூக். 1/61)
3. உரோமையர் 13/12. 4. தியாகராஜ சுவாமிகள் (கி. பி. 1767 - 1847)
5. கிறிஸ்ரியன் பேர்னாட் 6. மார்வன் அத்தபத்து.

**பரிசு பெறுவோர்:**

ரூபா 100/- — அ. ஷிரோமி லக்சாந்தி
'இனிக்கோ'
புதுமுகத்துவார வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.

ரூபா 75/- — F. அற்புதராஜ்
இல. 1, எல்லை வீதி தெற்கு,
தாண்டவன்வெளி, மட்டக்களப்பு.

ரூபா 50/- — அலு. யூட் சுமன்கலன்
25/1, தக்கியா வீதி,
திருகோணமலை.

ரூபா 25/- — J. கரோலின்
எருவில் - II, களுவாஞ்சிகுடி.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. - இ.ஆ.

22ம் பக்கத் தொடர்ச்சி ... ...

ஆகவே, நம்பிக்கையைக் கட்டி எழுப்பும் பணியை அரசே முன்னெடுக்க வேண்டும். ஆனால் நாட்டில் நடப்பதெல்லாம் ஏறுக்கு மாறாகவே இருக்கிறது. இந்நிலையில் பேச்சு வார்த்தை, தீர்வு, சமாதானம் என்பதெல்லாம் பொய்யாய், பழங்கதையாய், கனவாய்ப் போவதைத்தவிர வேறில்லை. பேரழிவிற்குள் சிக்கிக் கொண்டிருக்கும் இந்நாட்டின் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற இதயசுத்தியான நோக்கம் எவருக்கும் இருந்தால் கொடூர யுத்தத்தை உடன் நிறுத்தி, அநியாய அழிவுகளைத் தடுத்து, தேவையற்ற கெடுபிடிகளை நீக்கி நம்பிக்கை ஊட்டும் நல்ல சூழ்நிலையை உருவாக்க அரசும் ஏனையோரும் முன்வரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலிய - பொது அறிவுப் போட்டி - 47

1. எருசலேம் தேவாலயத்தை அழித்த பபிலோனிய மன்னன் யார்?

..........................................................................................

2. இந்தத் தைலத்தை முந்நூறு தெனாரியத்துக்கு விற்று அப்பணத்தை ஏழைகளுக்குக் கொடுத்திருக்கக் கூடாதா? கூறியவர் யார்?

..........................................................................................

3. 'இவர்கள் நீரற்ற ஊற்றுக்கள், புயலால் அடித்துச் செல்லப்படும் மேகங்கள்' திருமுகம் ஒன்றில் கூறப்படும் இக்கூற்றுக்கள் யாரைக் குறித்து கூறப்பட்டவை?

..........................................................................................

4. அண்மையில் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்ட பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரின் பெயர் என்ன?

..........................................................................................

5. 'சதாவதானி' என்று குறிப்பிடுவது யாரை?

..........................................................................................

6. உலகில் அதிகளவில் செய்திகளை வெளியிடும் நிறுவனம் எது?

..........................................................................................

பெயர்..........................................................

முகவரி ........................................................

..................................................................

.................................... இங்கே வெட்டவும் ....................................

**போட்டி விதிகள்**

போட்டியில் ஆறு வினாக்களுக்கும் சரியான விடைகளை அளிப்போர் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படும் ஒருவருக்கு ரூபா 100/- பரிசாக வழங்கப்படுவதோடு ஐந்து வினாக்களுக்கு, நான்கு வினாக்களுக்கு மூன்று வினாக்களுக்கு மட்டும் சரியான விடைகளை அளிப்பவர்களில் தெரிவு செய்யப்படும் ஒவ்வொருவருக்கும் முறையே 75/- 50/- 25/- ஆகிய பரிசுத் தொகைகள் வழங்கப்படும்.

போட்டியில் அனைவரும் பங்குபற்றலாம். ஆனால் தொண்டனில் வெளிவரும் கூப்பனில் அனுப்பப்படும் விடைகள் மட்டுமே போட்டிக்குச் சேர்த்துக் கொள்ளப்படும். ஒருவர் எத்தனை கூப்பனை வேண்டுமானாலும் அனுப்பலாம்.

**விடைகளை அனுப்ப வேண்டிய இறுதி நாள்: 15-05-2000**

**முகவரி: விவிலிய பொது அறிவுப் போட்டி - 47,**

**தொண்டன், அ. பெ. எண். 44, மட்டக்களப்பு. 30000.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசுப் போட்டி! பரிசுப் போட்டி!

*விவிலிய அறிவை வளர்க்க ஒரு போட்டி !*

*பொது அறிவைப் பெருக்க ஒரு போட்டி !*

*இரண்டு போட்டிக்கும் பரிசுகளுண்டு !*

*தொண்டன் – மே மாத இதழிலிருந்து ஆரம்பம் !*

* ஒவ்வொரு தொண்டன் பிரதியுடனும் இணைந்து வரும் போட்டிக் கூப்பனில் உள்ள வினாக்களுக்கு அதே கூப்பனில் விடைகளை எழுதி அனுப்ப வேண்டும்.

* உங்கள் தொண்டன் பிரதிகளை பாதுகாத்து வையுங்கள். பொது அறிவுப் போட்டியில் ஒரு வினா அதற்கு முந்திய மாதத் தொண்டனிலிருந்து இடம் பெறும்.

* ஒருவர் இரண்டு போட்டிகளிலும் பங்கு பற்றலாம் அல்லது ஒரு போட்டியிலும் பங்கு பற்றலாம்

* இரண்டு போட்டிகளுக்கும் தனித்தனிப் பரிசுகளுண்டு.

பிள்ளைகளே ! உங்கள் அறிவை வளர்க்க
அரிய வாய்ப்பு !
காத்திருங்கள் உங்கள் தொண்டன் பிரதிக்கு!

## தொண்டன் சந்தாதாரரே! கொஞ்சம் நில்லுங்கள்

தொண்டன் சந்தாதாரராக இணைந்து வழங்கும் ஒத்துழைப்புக்கு முதலில் நன்றி கூறுகின்றோம்

தற்போது பதிவு செய்யப்பட்ட சஞ்சிகைகளை அனுப்புவதற்கான தபாற் செலவு இரண்டு மடங்காக அதிகரித்திருப்பதன் காரணமாக ஓர் ஆண்டுச் சந்தாவுக்கு ரூபா 28/= நட்டமேற்படுகிறது. ஏற்கனவே சுமைதாங்கியான தொண்டனுக்கு இது மேலதிகச் சுமையாகும். எனவே சுமையின் ஒரு பகுதியை வாசகர்கள் எம்முடன் பகிர்ந்து கொள்வீர்கள் என்ற நம்பிக்கையோடு ஏப்பிரல் மாதம் முதல் தொண்டன் சஞ்சிகைக்கான ஆண்டு சந்தா ரூபா 160/= ஆக உயர்த்தப்படுகிறது என்பதை அறியத்தருகிறோம். இச் சிறிய அதிகரிப்பை பொருட்படுத்தாது சந்தாதாரர்கள் தொடர்ந்து ஆதரவளிப்பீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. தனிப்பிரதியின் விலை தொடர்ந்தும் 12/= ரூபாவாகவே இருக்கும்.

*நிர்வாகம்*

**தொண்டன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.




## இலங்கை வானொலி தேசிய சேவையில் கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிகள் - தமிழ்

## மே - 2000

நாள்.: 06
நேரம் : மாலை 7.45 மணி
புதிய உலகம்

நாள் 6,7, 8, 9
நேரம்:- காலை 5.30 மணி
கத்தோலிக்க நற்சிந்தனை
வழங்குபவர் :- அருள் சகோ. ஜோன்பிள்ளை

நாள் : 10, 11, 12
நேரம் :- காலை 5.50 மணி
கத்தோலிக்க நற்சிந்தனை
வழங்குபவர் :- அருள் சகோ. பிரைனர் செலர்

நாள் 14
நேரம் :- மாலை 7.00 மணி
புதிய உலகம்

நாள் - 16
நேரம்:- மாலை 7.45 மணி
சிறுவர் உலகம்
திருமறை வினாடி வினாப் போட்டி
நடத்துபவர் :- லக்சாந்தி

நாள் - 20, 21, 22, 23
நேரம் :- காலை 5. 30 மணி
கத்தோலிக்க நற்சிந்தனை
வழங்குபவர் :- அருள் சகோ. அ. யேசுதாசன்

நாள் - 24, 25, 26
நேரம் :- காலை 5.30 மணி
கத்தோலிக்க நற்சிந்மனை
வழங்குபவர் :- அருள் திரு. சந்திரா

நாள் - 28
நேரம் :- மாலை 7.00 மணி
புதிய உலகம்

நாள் - 30
நேரம் :- மாலை 7.45 மணி
சிறுவர் உலகம்

தொகுப்பு : மலர் வேந்தன
தொடர்பு : த. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

*WANASINGE PRINTERS, BATTICALOA.*
**Cover Printed by - St. Joseph's Catholic Press, Batticaloa.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org